## உங்கள் கற்றலை மேம்படுத்துவது எப்படி?

அடுத்த மட்டத்திற்கு முன்னேற உங்களுக்கு 120 முதல் 140 மணித்தியால பாடநேரம் தேவைப்படும் என்பதை நினைவில் வையுங்கள். பின்வரும் ஆலோசனைகளைக் கைக்கொள்வதன் மூலம் நீங்கள் உங்களது கற்றலை மேம்படுத்த முடியும். நீங்கள் உங்களுடைய ஆசிரியரின் உதவியையும் பெற்றுக்கொள்ளலாம்.

### வகுப்புக்கு முன் நீங்கள் செய்யக்கூடியவை:

1. உங்களுடைய முதலாவது பாடம் ஆரம்பமாவதற்கு முன்னர் நீங்கள் எமது MyClub செயற்பாடுகளில் ஏதேனுமொன்றில் இணைய வேண்டுமென நாம் பரிந்துரை செய்கின்றோம். இந்த இலவச செயற்பாடுகள் மூலம் நீங்கள் ஆங்கிலத்தைப் பேசிப்பழகவும் ஆசிரியர்கள் மற்றும் ஏனைய மாணவர்களைச் தொடர்புகொள்ளவும் முடியும். இறுதியில், ஆசிரியர் உங்களுடன் சிறிது நேரத்தைச் செலவிட்டு Myclass பற்றிய கண்ணோட்டத்தையும் பாடங்களைத் தெரிவு செய்வது எப்படி என்பதையும் விளக்கிக்கூறுவார்.
2. உங்கள் கற்றலைத் திட்டமிடுங்கள். வாரமொன்றில் குறைந்தபட்சம் 2 பாடங்களையும் MyClub செயற்பாடு ஒன்றையும் செய்வதற்குத் திட்டமிடுங்கள். முடியுமானால், உங்கள் பாடங்களையும் செயற்பாடுகளையும் வாரம் முழுவதும் நீடிக்கக்கூடிய விதத்தில் பரவலாக்க முயலுங்கள். ஒரே தடவையில் நீண்ட பயிற்சிச் செயற்பாட்டில் ஈடுபடுவதைவிட அடிக்கடி குறுகிய பயிற்சிகளில் ஈடுபடுவது நல்லது. உங்கள் கல்வி நேர அட்டவணையில் உங்கள் சுய கல்விக்காக நேரத்தை ஒதுக்குவதும் முக்கியம்.
3. வெவ்வேறு ஆசிரியர்களைத் தெரிவுசெய்து பார்க்கவும். சில சமயங்களில் ஒரு ஆசிரியரைவிட இன்னுமொரு ஆசிரியரை நீங்கள் விரும்பக்கூடும்.
4. உங்கள் வகுப்புகளைத் தெரிவு செய்யும்போது உங்கள் கற்றல் இலக்குகளைப் பற்றி யோசிக்கவும். பயன்முனைப்பான கற்றல் இலக்கொன்றை உருவாக்குவதற்கு உதவி பெற, இப் பக்கத்தைப் பார்க்கவும்.
5. உங்கள் பாடங்களைத் தயார் செய்யுங்கள். தலைப்பு மற்றும் விபரிப்புகளைப் பார்த்து அவற்றின் உள்ளடக்கத்தை அறிந்துகொள்ளுங்கள். அத்துடன், MyClass தளத்திலுள்ள myResroucesOnline என்பதையும் பாருங்கள்.

### வகுப்பில் நீங்கள் செய்யக்கூடியவை:

1. இலகுவாகக் கற்பதற்கு ஒரு கணனியைப் பயன்படுத்துங்கள்:
   a. உங்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும்
   b. ஒரு தொலைபேசியைவிட இலகுவாக சகல ஒன்லைன் வசதிகளையும் அணுக முடியும்
2. நீங்கள் ஓர் அமைதியான சூழலில் இருந்தால் கற்றுக்கொள்வது உங்களுக்கும் உங்கள் சக மாணவர்களுக்கும் சுலபமாகும். அமைதியான அறை ஒன்றை தெரிவுசெய்து அதனைப் பூட்டிக்கொள்ளுங்கள். வெளியிடத்தில் இருப்பதைத் தவிருங்கள். ஏனென்றால் வெளிச் சத்தங்களைக் கட்டுப்படுத்தக் கஷ்டமாயிருக்கும்.
3. நீங்கள் சிறந்த இணையத்தள இணைப்பைக் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால், மற்றைய மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் இடைத்தொடர்புகொள்ள முடியாதிருக்கும்.
4. எமது வகுப்புகள் இடைத்தொடர்பு முறையிலானவை என்பதால், வகுப்பில் தீவிரமாகப் பங்கொள்ள உங்கள் வீடியோவை செயல்நிலையில் வைப்பது அவசியம். நீங்கள் அவ்வாறு செய்யாவிட்டால், உங்கள் ஆசிரியர் உங்களுக்கு நினைவூட்டுவார். இது எமது கண்டிப்பான பாதுகாவல் கொள்கையின் ஒரு பகுதியாகவும் அமைகின்றது.
5. வகுப்பில் தீவிரமாகப் பங்குகொள்வது முன்னேற்றத்திற்கான மிகச் சிறந்த வழியாகும். தீவிரமாகப் பங்குபற்றாமல் அமைதியாக இருக்கும் மாணவர்கள் வழமையாக அதிக முன்னேற்றம் அடைவதில்லை.
6. வகுப்பில் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பில் உங்கள் செயற்றிறனை அடிப்படையாகக் கொண்டே நீங்கள் மதிப்பீடு செய்யப்படுவீர்கள். எனவே, இயன்றளவு சிறப்பாகச் செயற்படுங்கள்.

### வகுப்பிற்குப் பின் நீங்கள் செய்யக்கூடியவை:

1. வகுப்பிற்குப் பின்னர், நீங்கள் சிறப்பாகச் செய்த பணிகள் எவை, மேலும் முன்னேற்றப்பட வேண்டிய விடயங்கள் எவை என்பது பற்றி யோசியுங்கள். நீங்கள் வகுப்பில் செய்த காரியங்களை

myResroucesOnlineஐயும் myClass தளத்திலுள்ள மூலவளங்கங்களையும் பயன்படுத்தி மீட்டல் செய்துகொள்ளலாம்.
2. மேலும் பயிற்சி செய்ய விரும்புகின்றீர்களா? உங்கள் கற்றலுக்கு உதவ பின்வரும் இலவச மூலவளங்களைப் பயன்படுத்துமாறு நாம் பரிந்துரை செய்கின்றோம்:

பிரிட்டிஷ் கவுன்ஸில் வலைத்தளங்கள்
ஆங்கில இலக்கணம் https://learnenglish.britishcouncil.org/grammar

ஆங்கில சொல்வளம் https://learnenglish.britishcouncil.org/vocabulary

வியாபார ஆங்கிலம் https://learnenglish.britishcouncil.org/business-english

பொது ஆங்கிலம் (மேலதிக பயிற்சி: வீடியோ, ஓடியோ, சஞ்சிகை, கதை வலயம் மற்றும் செயலிகள்) https://learnenglish.britishcouncil.org/general-english

சமூக நிகழ்வுகள் (இலவசமாக இணையக்கூடிய பதிவுகள் YouTube மற்றும் Facebook இல் உள்ளன) https://learnenglish.britishcouncil.org/online-courses/community-events

ஏனையவை

BBC ஆங்கிலம் கற்றல் (பல்வேறு வகையான சுய அணுகள் விடயங்கள் மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்) https://www.bbc.co.uk/learningenglish/

கேம்பிரிஜ் ஆங்கில எழுத்து மற்றும் முன்னேற்றம் (இடைநிலை மட்டத்திலிருந்து எழுத்துப் பணிகள், மென்பொருள் மூலமான பின்னூட்டலுடன்) https://writeandimprove.com/free

குறிப்புகள்
கற்பவரின் அகராதியைப் பயன்படுத்தும்படி நாம் பரிந்துரை செய்கின்றோம். அது இலகுவில் புரிந்துகொள்ளக்கூடிய வரைவிலக்கணங்களை ஆங்கிலத்தில் வழங்கும். இதன் மூலம் நீங்கள் உங்களுடைய தாய்மொழி தவிர்ந்த பல மொழிகள் பற்றி அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெறுவீர்கள். மொழி ஒன்றைக் கற்றுக்கொள்வதற்கு இது முக்கியம்.

கேம்பிரிஜ் கற்பவரின் அகராதி https://dictionary.cambridge.org/dictionary/learner-english/

## IELTS கோச் ஆலோசனைகள்

நீங்கள் இங்கு IELTS மாதிரிக் கேள்வியைப் பயிற்சி செய்யலாம்: https://www.ielts.org/for-test-takers/sample-test-questions

உங்கள் இலக்குத் தொகுதியின் விபரிப்புகளை நீங்கள் பரிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும். நீங்கள் உங்களுடைய இலக்கை நோக்கி முன்னேறுவதை உறுதிப்படுத்த இது உதவும்.

பகுரங்க IELTS விபரிப்புகள்:

எழுத்துப் பணி 1
https://takeielts.britishcouncil.org/sites/default/files/ielts_task_1_writing_band_descriptors.pdf

எழுத்துப் பணி 2
https://takeielts.britishcouncil.org/sites/default/files/ielts_task_2_writing_band_descriptors.pdf

பேச்சுப் பணி https://www.ielts.org/-/media/pdfs/speaking-band-descriptors.ashx?la=en

பரீட்சை எடுக்க நீங்கள் தயாரா? எமது ஆலோசனைப் பக்கத்தைப் பாருங்கள் https://takeielts.britishcouncil.org/take-ielts/test-day-advice